செ.கு.எண் :- 10

நாள் :- 06-01-2012.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 6 .1. 2012

காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர் போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு.M. புருஷோத்தமன் என்பவர் பணி நிமித்தமாக 13.10.2011 அன்று காட்டான்குளத்தூர் சாலை சந்திப்பில் வாகனப் போக்குவரத்து ஒழுங்குப்படுத்தும் பணியை மேற்கொண்டிருந்த போது, வேன் மோதி படுகாயமடைந்து, பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 15.10.2011 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தலைமைக் காவலர் திரு புருஷோத்தமன் போக்குவரத்து காவல் பணியில் ஈடுபட்டிருந்த போது சாலை விபத்தில் உயிரிழந்தார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு புருஷோத்தமன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது காலமான தலைமைக் காவலர் புருஷோத்தமன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை-9**